[1973 நவம்பர் 21

கும்முடிப்பூண்டியில் சிறுதொழில் பயிற்சி

*281 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டியில் பல்வேறு சிறு தொழில்களைக் கற்பிக்க நடமாடும் பேருந்து தொழிற் பயிற்சி நிலையம் (Mobile Van Unit) அமைப்பதில் மேலும் காலதாமதப்படுவதற்கான காரணங்கள் யாவை ?

(இ) இது எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) கும்மிடிப்பூண்டி பஞ்சாயத்து ஒன்றிய ஆணையரின் வேண்டுகோளுக்கு இணங்க இந்திய அரசுக்குச் சொந்தமான சிறுதொழில் பணி நிலையத்தினரால், சிறு தொழில்களை செயல்முறைப்படுத்தியும் கைவினைஞர்களுக்கு பயிற்சியும் அளிக்கும், இரு நடமாடும் தொழிற் பயிற்சிப் பேருந்துகள் 15—4—1973 அன்று கும்மிடிப்பூண்டி ஒன்றியத்திற்கு அனுப்பப்பட்டு, அப்பயிற்சி 15—5—1973 வரை கொடுக்கப்பட்டுள்ளது.

(இ) வினா எழாது.

திரு. கா. வேழவேந்தன் : அந்தப் பயிற்சி பயனுள்ளதாக இருக்கிற காரணத்தினால் முறைப்படி அந்த 'வான்' மீண்டும் அப்பகுதிக்குச் செல்லுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இம்மாதிரி நடமாடும் பயிற்சி நிலையங்களை பின்தங்கிய பகுதியிலுள்ள கிராமங்களுக்கு அனுப்பவேண்டும் என்பது தான் அரசாங்கத்தின் நோக்கம். அனுப்பப்பட்ட பகுதிக்கு அனுப்புவதாக இப்பொழுது இல்லை.

ஒன்றியங்களில் தொழில் விரிவாக்க அதிகாரிகள்

*282 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு தொழில் விரிவாக்க அதிகாரி [Extension Officer (Industries)] நியமிப்பதற்கான செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லை.

1973 நவம்பர் 21]

திரு. கா. வேழவேந்தன்: ஒவ்வொரு ஒன்றியத்திலும் தொழில் வளரவேண்டும் என்கின்ற கொள்கையின் அடிப்படையில் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு ஈ.ஓ.ஐ. நியமிக்கவேண்டும் என்று கருதி, இரண்டு ஒன்றியங்களுக்கு ஒரு ஈ.ஓ.ஐ. இருப்பதை மாற்றி ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு ஈ.ஓ.ஐ. அதிகாரி நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஏற்கனவே 374 ஒன்றியங்களுக்கும் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, இடையிலே நிறுத்தப்பட்டு, தி.மு.க. ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும், பேரறிஞர் அண்ணா அவர்கள் இதைப் பரிசீலனை செய்யச் சொல்லி, அது சரியாக வராது என்று சொல்லி, 374, 294 ஆகக் குறைக்கப்பட்டு, அதிலும் பிறகு 60 பேர்களுக்கு வேலை இல்லாமல் வேறு துறைக்கு மாற்றப்பட்டார்கள். ஒவ்வொரு பகுதியிலும் எந்தெந்தப் பகுதியிலே எதை எதை எல்லாம் இணைக்கலாம் என்று இருக்கிறதே தவிர, தனியாக எந்தச் செயற்குறிப்பும் இல்லை.

திருச்சிராப்பள்ளியில் பேருந்து நிலையம்

*283 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி சிந்தாமணி பஸ் நிலையம் மிகவும் இடநெருக்கடியான இடத்தில் இருப்பது உண்மையா?

(இ) ஆம் எனில், இதை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) இப்பொழுது திருச்சிராப்பள்ளியில், திருச்சி சந்திப்பின் பகுதியில் ஒரு பஸ் நிலையம் உள்ளது. சிந்தாமணியில் பஸ் நிலையம் இல்லை.

(இ) வினா எழவில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிந்தாமணியில் பஸ் நிலையம் இல்லை என்று கூறினார்கள். செயின்ட் ஜோசஃப் கல்லூரியின் அருகில் இருப்பது சிந்தாமணி பஸ் நிலையம்தான். தற்பொழுது அங்கே இட நெருக்கடி இருக்கிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆகவே, அமைச்சர்